**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**

**முன்னிலை திரு.S.B. சுஜித், B.A. B.L. (Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்**

2026 ம் வருடம் மார்ச் திங்கள் 07-ம் நாள் சனிக்கிழமை

**C.I.S.Crl.M.P.No.114/2026**

**CNR NO. TNRM05-000318-2026**

சாகுல் ஹமீது(வயது 31/2026)
த/பெ.செய்யது அபுதாகீர்,
சேது நகர்,
மண்டபம். .......மனுதாரர்/எதிரி

-- எதிராக --

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
மண்டபம் காவல்நிலையம்,
குற்ற எண்.21/2026 .......எதிர்மனுதாரர் / அரசு
குற்ற முறையிடுபவர்

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விடுவிக்ககோரி B.N.S.S. பிரிவு 480-ன் கீழ் 03.03.2026 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட இப்பிணை மனு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த இலவச சட்ட உதவி வழக்கறிஞர் திரு.திருமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்களின் பதில் மனு தாக்கல் செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ......

**உத்தரவு**

இந்த மனுதாரர்/எதிரி மீது மண்டபம் காவல்நிலைய குற்ற எண்.21/2026 ச/பி. 329(4), 296(b), 115(2), 118(1), 351(3) BNS-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>**

இந்த மனுதாரர்/எதிரி மீது மண்டபம் காவல்நிலைய குற்ற எண்.21/2026 ச/பி. 329(4), 296(b), 115(2), 118(1), 351(3) BNS–ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்த மனுதாரர்/எதிரி கடந்த 11.02.2026–ம் தேதியன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் மனுதாரர்/எதிரி எந்த விதமான குற்றமும் புரியாதவர் என்றும், சட்டத்தை மதித்து நடப்பவர் என்றும், மனுதாரர்/எதிரி இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், கடந்த 25 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்த வருகிறார் என்றும் பிணையில் விடுதலை செய்ய போதுமான பிணையம் தரத்தயாராக உள்ளார் என்றும் பிணையில் வந்தால் அரசுத்தரப்பு சாட்சிகளை கலைக்கவோ எங்கும் தலைமறைவாகவோ மாட்டார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும் பட்சத்தில் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பார் என்று வாதிட்டார்.

**<u>அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் :–</u>**

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனுவின் பேரில் அரசுத்தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. அந்த பதிலில் கடந்த 10.02.2026ம் தேதி மாலை சுமார் 03.15 மணியளவில் புகார்தாரர் கடையிலிருக்கும் போது புகார்தாரரின் கடைக்கு முன் அமர்ந்து மதுபோதையில் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்ததாகவும், அதை கேட்ட புகார்தாரரை நீ யாருடா என்னை கேட்க என அசிங்கமாப பேசி, புகார்தாரரின் கடைக்குள் அத்துமீறி நுழைத்து கையால் அடித்து புகார்தாரரை வெளியில் இழுத்து கீழே கிடந்த சல்லி கல்லை எடுத்து தாக்கி புகார்தாரரின் நாடியில் ரத்தக் காயம் ஏற்படுத்தியும் கொலைமிரட்டல் விடுத்ததாக புகார்தாரர் மண்டபம் PHCக்கு சென்று சிகிச்சை பெற்று நிலையம் வந்து கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்காகும். எதிரிகள் கடந்த 11.02.2026ம் தேதி முதல் இராமநாதபுரம் மாவட்ட சிறையில் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார். எதிரி மீது மூன்று முன் வழக்குகள் மண்டபம் காவல் நிலையத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடுவித்தால் மீண்டும்

இதேபோன்று குற்றச்செயல்களிலும் ஈடுபடுவார்கள் என்பதாலும், புகார்தாரர் சம்பந்தப்பட்டவர்களிடம், வழக்கின் சாட்சிகளிடம் தொடர்ந்து பிரச்சனை செய்யக்கூடும் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்க நேரிடும் என்பதாலும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக கூடும் என்பதாலும் எதிரிகளை பிணையில் விட கடுமையான ஆட்சேபனையை அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்வு :–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் மனு மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. முடிவில், இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் அரசுத்தரப்பு ஆட்சேபனைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும்பொழுது, இம்மனுதாரர்/எதிரி மீது கடந்த 11.02.2026–ம் தேதியன்று வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் மண்டபம் PHC யில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். எதிரி கடந்த 25 நாட்களாக நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார். மேலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு புலன்விசாரணையின் பெரும்பகுதி முடிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரியை பிணையில் விடுவதால் புலன் விசாரணை எந்த வகையிலும், பாதிக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேற்கானும், பரிசீலனை அடிப்படையில் எதிரியை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விட இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. எதிரி தனக்காக இரு பிணையதாரர்களும் தலா ரூ.10,000/–க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

2. எதிரிபிணையில் வெளிவந்த நாள் முதல் மண்டபம் காவல்நிலையத்தில் தொடர்ந்து 30 தினங்களுக்கு காலை 10.00 மணிக்கு முன்னிலையாகி கையொப்பம் செய்து வரவேண்டும்.

3. எதிரி பிணையில் வந்தபிறகு எந்தவொரு குற்ற வழக்கு சம்பவத்திலும் ஈடுபடக்கூடாது.

4. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு அழைக்கும்போது எதிரிகள் தவறாமல் ஆஜராகவேண்டும்.

5. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரும் போது எதிரிகள் தவறாமல் ஆஜராக வேண்டும்.

இன்று 2026ம் வருடம் மார்ச் திங்கள் 07-ம் நாள் சனிக்கிழமை இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.07 16:34:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.